ஜூன் 30

மனன வசனம்

**பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். அப்போஸ்தலர் 1:8.**

ஆராய்ச்சிக்கு

*அப் 1:6-8; லூக்கா 24:25; லூக்கா 24:44-48; உபாகமம் 19:15; அப் 1:9-26; நீதி 16:33.*

ஜூன் 30 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

பாடம் 1

# நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்



பூமியில் இயேசுவின் ஊழியப்பணி முடிவடைந்திருந்தது. ஆவியானவரை தேவன் அனுப்ப இருந்தார். சீடர்கள் உலகெங்கும் ஊழியம்செய்யவும், பல அற்புதஅடையாளங்கள்மூலம்அந்தஊழியப்பணியை உறுதிப்படுத்தவும், ஆவியானவர் அவர்களுக்கு வல்லமைகொடுக்க இருந்தார். மனிதனாக பூமியிலேயே இயேசு அவர்களோடு தொடர்ந்து இருக்க முடியாது. மனிதனாக இருந்ததால், சரீரப்பிரகாரமாக உலகெங்கும் போக முடியாத நிலை இருந்தது; மேலும், ஆவியானவர் பூமிக்கு வருவதற்கு, இயேசு பரலோகம் சென்று மேன்மைப்பட வேண்டியிருந்தது.

இயேசுவின் உயிர்த்தெழுதல் வரையிலும் சீடர்கள் இவற்றைத் தெளிவாக அறிந்திருக்கவில்லை. அவர்கள் எல்லாவற்றையும் உதறிவிட்டு அவரைப் பின்பற்றினவர்கள்தாம்; ஆனால், இயேசுவானவர் தங்கள் தேசத்தின் ராஜாவாக, ரோமர்களை விரட்டிவிட்டு தாவீதின் ஆட்சியை நிறுவப்போகிறார் என்றும், இஸ்ரவேலின் முந்தைய மகிமையை மீண்டும் தரப்போகிறார் என்றும் நினைத்திருந்தார்கள். இதுதவிர வேறுவிதத்தில் சிந்திக்க அவர்களால் முடியவில்லை.

இதை மனதில் வைத்துதான் தமது சீடர்களுக்கு இறுதியாக அப் 1இல் இயேசு அறிவுரை வழங்குகிறார்; ஆவியானவரைக் குறித்த வாக்குறுதியைக் கொடுக்கிறார். இயேசு பரமேறிச் சென்ற நிகழ்ச்சியையும், அதன்பிறகு பெந்தெகொஸ்தே அனுபவத்திற்காக ஆதிகாலச் சபை ஆயத்தமான நிகழ்ச்சியையும் அந்த அதிகாரம் சொல்கிறது.

2018, ஜுலை 7 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

ஞாயிறு, ஜூலை 1

# இஸ்ரவேல் புதுப்பிக்கப்படுதல்

பழைய ஏற்பாட்டில் மேசியாபற்றி இரண்டு வகையான தீர்க்கதரிசனங்கள் உள்ளன:

1. மக்களுடைய பாவங்களுக்காக மரிக்கவிருந்த மேசியாபற்றிய தீர்க்கதரிசனங்கள் ஒரு வகை. ஏசா 52:13-53:12; தானி 9:26.
2. ராஜாவாக என்றென்றும் அரசாளப்போகிற மேசியாபற்றிய தீர்க்கதரிசனங்கள் இன்னொரு வகை. சங் 89:3,4,35-37; ஏசா 9:6,7; எசே 37:25; தானி 2:44; 7:13,14.

இந்தத் தீர்க்கதரிசனங்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடானவை அல்ல. மேசிய ஊழியத்தின் இரண்டு காலக்கட்டங்களை அவை சுட்டிக்காட்டுகின்றன; முதலாவது அவருடைய பாடுகள்; பிறகு, அவர் ராஜாவாக அரசாளப்போவது. லூக்கா 17:24,25; 24:25,26.

முதல் நூற்றாண்டு யூதர்களிடம் மேசியாகுறித்த எதிர்பார்ப்பு ஒருதலைப் பட்சமாக இருந்தது. மேசியா தங்கள் ராஜாவாக வந்து, அரசியல் ரீதியான விடுதலை தரப்போவதாக எதிர்பார்த்தார்கள்; அதனால் பாடுபட்டு, மரிக்க விருந்த மேசியாவாக அவரை அவர்களால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

முதலில், சீடர்களும் ராஜாவாகப்போகிற மேசியாவையே எதிர்பார்த்தார்கள். இயேசுவே மேசியாவென்று நம்பினார்கள். மத் 16:16,20. அவர் ராஜாவாக உட்காரும்போது அவருடைய இருபக்கத்திலும் உட்காரப்போவது யாரென தங்களுக்குள் சிறுபிள்ளைத்தனமாகப் பேசிக்கொண்டார்கள். மாற்கு 10:35-37; லூக்கா 9:46. தமக்கு நேரிடவிருந்ததுகுறித்து இயேசு எச்சரித்தபோதிலும் அது என்னவென்று அவர்களுக்குப் புரியவில்லை. அதனால்தான், அவர் மரித்ததும் குழம்பினார்கள்; தைரியமிழந்தார்கள். அவர்கள் வார்த்தையிலே சொன்னால், **அவரே இஸ்ரவேலை மீட்டிரட்சிப்பவர் என்று நம்பியிருந்தார்கள்**. லூக்கா 24:21.

**சீடர்கள் இன்னமும் புரிந்துகொள்ளத் தடுமாறின ஒரு விஷயம் என்ன? அப் 1:6. அந்தக் கேள்விக்கு இயேசு சொன்ன பதில் என்ன? அப் 1:7.**

இயேசு மரித்ததும் சீடர்களின் எதிர்பார்ப்புகள் தவிடுபொடியாயின. ஆனால், அவர் உயிர்த்தெழுந்ததுமே அவை மீண்டும் தலைதூக்கின; அரசியல் ரீதியாக அவர்கள் எதிர்பார்த்த விஷயங்களுக்கு அளவே இல்லை. இயேசு உயிர்த்தெழுந்ததும், மேசியாவின் ராஜ்யத்தை இறுதியாக நிறுவப்போகிறார் என்று அவர்கள் நினைத்ததில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை.

அவர்களுடைய கேள்விக்கு இயேசு நேரடியாகப் பதிலளிக்கவில்லை. ‘‘உடனடியாக ராஜ்யத்தை நிறுவப்போவதில்லை’’ என்று சொல்லி, அவர்கள் சொன்னதை அவர் மறுக்கவுமில்லை; நிறுவுவேன் என்று சொல்லவும் இல்லை. தேவனுடைய செயல்களை தேவன்மட்டுமே அறிவார்; மனிதர் அதை அறிந்து கொள்ள முடியாது என்று சொல்லி, அந்த விஷயத்தை அப்படியே விட்டுவிட்டார்.

சீடர்களின் பிரச்சனைதான் என்ன? லூக்கா 24:25. வேதாகமம் சொல்வதை விட்டுவிட்டு, நாம் விரும்புவதைமட்டுமே விசுவாசிப்பது ஏன் எளிதானது? இந்தக் கண்ணியிலிருந்து எவ்வாறு தப்பலாம்?

## சீடர்களின் ஊழியப்பணி

**தீர்க்கதரிசனங்கள் பற்றி ஊகமான கருத்துகளை சிந்திப்பதற்குப்பதிலாக சீடர்கள் என்ன செய்திருக்கவேண்டும்? அப் 1:8.**

*சீடர்களின் ஊழியப்பணி குறித்து நான்கு முக்கிய விஷயங்கள் உள்ளன.*

❶ **ஆவியானவர் தரப்படுதல்:** தேவ மக்கள்மத்தியில் ஆவியானவர் எப்போதுமே செயல்பட்டு வந்திருக்கிறார். ஆனால், ஆவியானவர் இனி விசேஷித்த விதத்தில் ஊற்றப்படவிருந்தார். ஏசா 44:3; யோவேல் 2:28,29. இயேசுவும்கூட ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றிருந்தார்; எனவே, அவருடைய ஊழியக் காலத்திலும் ஆவியானவர் செயல்பட்டுவந்தார். லூக் 4:18-21. ஆனால் பரலோகத்தில் கிறிஸ்து உயர்த்தப்படும்வரை அதிகாரப்பூர்வமாக அவர் அருளப்படவில்லை. யோவான் 7:39; அப் 2:33.

❷ **சாட்சிபகர்தல்:** சாட்சி சொல்வது என்றால், நேரடியாகப் பார்த்ததைச் சொல்வதாகும். அந்தத் தகுதியை சீடர்கள் முற்றிலும் பெற்றிருந்தார்கள். அப் 1:21,22; 4:20; ஒப்பிடவும்: 1யோவான் 1:1-3. இயேசுவோடு அவர்களுக்கு இருந்த விசேஷித்த அனுபவத்தை உலகத்தாரிடம் பகிர்ந்துகொள்ள அவர்களுக்கு ஊழியக்கட்டளை கொடுக்கப்பட்டது.

❸ **ஊழியத்திட்டம்:** முதலாவது எருசலேமிலும், பிறகு யூதேயாவிலும், அதன்பின் சமாரியாவிலும், இறுதியாக உலகமெங்கிலும் சீடர்கள் சாட்சிபகர வேண்டியிருந்தது. படிப்படியாக முன்னேறிச் செல்கிற ஒரு திட்டம் இது. யூதர்களின் பக்தி மார்க்கத்தில் எருசலேம் மைய இடமாகும்; அங்குதான் இயேசு குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டு, சிலுவையிலறையப்பட்டார். யூதேயாவும் சமாரியாவும் அருகில் இருந்த பகுதிகள்; அங்கும் இயேசு ஊழியம் செய்திருந்தார். ஆனாலும், அக்கம் பக்கப் பகுதிகளோடு சீடர்கள் தங்கள் ஊழியத்தை நிறுத்திக்கொள்வது தேவ திட்டமல்ல. உலகம்முழுவதிலும் அவர்கள் ஊழியம் செய்யவேண்டும்.

❹ **ஊழியத் திசை:** பழைய ஏற்பாட்டு காலங்களில் பிற நாடுகள் தேவனால் ஈர்க்கப்பட்டு இஸ்ரவேலிடம் வரவேண்டியிருந்தது. ஏசா 2:1-5. இஸ்ரவேல் சென்று, பிற நாடுகளுக்கு தேவனை அறிவிப்பது திட்டமல்ல. யோனா இதில் ஒரு விதிவிலக்கு. ஆனாலும் பொதுவான விதி அதுதான். இப்போது அந்த வியூகத்தில் ஒரு மாற்றம். இப்போதும் எருசலேம்தான் மையமாக இருந்தது; ஆனால் அதை மையமாக வைத்துச் செயல்படுவதற்குபதிலாக உலகத்தின் கடைசிமட்டுமுள்ள பகுதிகளுக்கு சீடர்கள் சென்று, சத்தியத்தை அறிவிக்கவேண்டியிருந்தது.

**சீடர்கள் பிரசங்கம் செய்யவேண்டியிருந்த முக்கிய செய்தி என்ன? லூக் 24:44–48.**

உயிர்த்தெழுந்தபிறகு நாற்பது நாட்கள் இயேசு சீடர்களோடு இருந்தார். அப் 1:3. தேவனுடைய ராஜ்யம்பற்றிய சத்தியத்தை அதிகமாக அவர்களுக்கு அப்போது விளக்கியிருப்பார்; ஆனால் அவர்களுக்குக் கேள்விகளும் இருந்தன. அப் 1:6. தீர்க்கதரிசனங்களை எல்லாம் நன்றாக அறிந்திருந்தாலும், ஒரு புதிய வெளிச்சத்தில், அதாவது, சிலுவையும் காலியான கல்லறையும் காட்டிய வெளிச்சத்தில் அவர்களால் அவற்றைப் பார்க்கமுடியவில்லை. அப் 3:17-19.

**செவ்வாய், ஜூலை 3**

## அவர் மீண்டும் வருவார்

**இயேசு பரலோகம் சென்ற காட்சியை லூக்கா எவ்வாறு விவரிக்கிறார்? அப் 1:9–11. இரண்டு தூதர்கள் அவர்களிடம் பேசினார்கள்; அதிலுள்ள முக்கியத்துவம் என்ன? உபா 19:15.**

இயேசு பரலோகம் சென்ற காட்சியை லூக்கா சுருக்கமாக விவரிக்கிறார். ஒலிவ மலையில் இயேசு தம் சீடர்களோடு இருந்தார். அவர்களை அவர் ஆசீர் வதித்துக் கொண்டிருந்தபோதே, பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். லூக்கா 24:51. என்ன நடந்ததோ அதை அல்ல, சீடர்கள் தங்கள் கண்களால் என்ன கண்டார்களோ, அதை லூக்கா வர்ணிக்கிறார். இயேசு பூமியை விட்டுச் சென்றார்; அவர் மேல்நோக்கிச் செல்வதாகத்தானே காட்டமுடியும்.

இயேசு பரலோகத்திற்குச் சென்றது தேவனுடைய அசாதாரணச் செயல்; 'அவர் உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்.' அப் 1:9. இந்த வினைச்சொல்லானது புதிய ஏற்பாட்டில் இங்குமட்டும்தான் உள்ளது; ஆனால் பழைய ஏற்பாட்டின் கிரேக்கமொழிப் பதிப்பான செப்டுவஜிண்ட்டில் பல இடங்களில் வருகிறது; தேவனுடைய செயலைச் சுட்டிக்காட்டுகிற சொல்லாக வருகிறது. தேவன்தாம் இயேசுவை பரலோகத்திற்கு எடுத்துக்கொண்டார் என்பது புரிகிறது; அவர்தானே இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினார். அப் 2:24,32; ரோமர் 6:4; 10:9.

இயேசுவை ஒரு மேகம் மறைத்துக்கொண்டது; மெல்லிய வஸ்திரம் தரித்த இருவர் சீடர்களுக்கு பின்னால் நின்றிருந்த சம்பவத்தை லூக்காமட்டுமே கூறு கிறார். பிரகாசமான வஸ்திரம் தரித்த தூதர்கள்பற்றிய பிற சம்பவங்களை இது ஞாபகப்படுத்துகிறது. அப் 10:30; யோவான் 20:12. இயேசு பரலோகம் சென்ற பிரகாரமே திரும்ப வருவார் என்று சீடர்களைத் திடப்படுத்தும்படி, அவர்கள் வந்திருந்தார்கள்; 'அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில்' கிறிஸ்து எடுத்துக் கொள்ளப்பட்டதாக அப்போஸ்தலர்மட்டுமே சொல்கிறது. அப் 1:9.

சீடர்கள் பார்த்துக்கொண்டிருக்க, இயேசு பரலோகத்திற்கு எடுத்துக்கொள் ளப்பட்டார். எனவே, எல்லாரும் காணும்படியாக மேங்களமேல் 'மிகுந்த வல்ல மையோடும் மகிமையோடும்' அவர் வருவார். லூக்கா 21:27. இரகசியமாக வரமாட்டார்; 'கண்கள் யாவும் அவரைக் காணும்.' வெளி 1:7. அவர் தனியாளாக வரப்போவதில்லை. லூக்கா 9:26; 2தெச 1:8. அவர் பரலோகம் சென்ற காட்சி யைவிட, அவருடைய இரண்டாம் வருகைக் காட்சி மிகுந்த மகிமையுள்ளதாக இருக்கும்.

இரண்டாம்வருகை பற்றிய நிஜமும், வாக்குறுதியும் எப்போதும் நம் மனதில் நீங்காமல் இருப்பதற்கு நான் என்ன செய்யலாம்? இந்த மாபெரும் உண்மை நம்முடைய பணவிஷயங்களிலும், முன்னுரி மைகளிலும், ஒழுக்கத்தீர்மானங்களிலும் எப்படிப்பட்ட தாக்கத்தை உ ண்டாக்கவேண்டும்?

## பெந்தெகொஸ்தேக்கு ஆயத்தம்

அப் 1:7,8இன் கேள்வி-பதிலில், இன்ன காலம் என்று இயேசு குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை. ஆனாலும், சீடர்கள் தங்கள் ஊழியப்பணியை முடித்ததும் தம் வருகை இருக்குமென அவர்களுக்கு ஏற்கனவே சொல்லியிருக்கிறார். மத் 24:14. ராஜ்யம் எப்போது வருமென்கிற கேள்விக்கு தேவதூதர்களும் பதில்சொல்லவில்லை; ஆனால், அதற்கு அதிக நாட்கள் செல்லாது என்பது போல பதிலளித்தார்கள். அதனால்தான் சீடர்கள் 'மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக்குத் திரும்பிவந்தார்கள்.' லூக்கா 24:52. நினையாத நேரத்தில் இயேசுவின் இரண்டாம் வருகை இருக்கும் என்கிற வாக்குறுதியானது, அவர்கள் தங்கள் ஊழியப்பணியைச் செய்ய அதிக ஊக்கத்தைக் கொடுத்திருக்கும்; முடிவு சீக்கிரத்தில் இருக்கிறதென நினைத்திருப்பார்கள். அப்போஸ்தலரில் தொடர்ந்து வருகிற நிகழ்ச்சிகள் இந்தக் கருத்தை உறுதிப்படுத்துகின்றன.

**யாரெல்லாம் மேல்வீட்டில் இருந்தார்கள்? அப் 1:12–14. ஆவியானவரின் வருகைக்காக எவ்வாறு தங்களை ஆயத்தப்படுத்தினார்கள்?**

சீடர்கள் ஒலிவ மலையிலிருந்து திரும்பி வந்ததும், எருசலேமில் இருந்த ஒரு மாடி வீட்டின் விருந்தினர்களுக்கான மேலறையில் கூடினார்கள். சீடர்களோடு சில பெண் சீடர்களும், இயேசுவின் தாயாரும் சகோதரரும் இருந்தார்கள். லூக் 8:1-3; 23:49; 24:1-12.

இயேசுவின் சகோதரர்கள் என்றால், ஒன்று அவர்கள் இயேசுவுக்குப்பிறகு மரியாளுக்கும் யோசேப்புக்கும் பிறந்தவர்களாக இருக்கவேண்டும். மாற்கு 6:3; மத் 1:25; லூக்கா 2:7. அல்லது, யோசேப்பின் முதல் திருமணத்தில் பிறந்த பிள்ளைகளாக இருக்கவேண்டும். அப்படியானால், முதல் மனைவியை இழந்த நிலையில்தான் மரியாளை யோசேப்பு திருமணம் செய்திருக்கவேண்டும். சீடர்களோடு அந்தச் சகோதரர்கள் இருந்தது ஆச்சரியம்தான்! ஏனென்றால் எப்போதும் இயேசுவைச் சந்தேகக் கண்ணோடே பார்த்தவர்கள். யோவான் 7:5; மாற்கு 3:21. ஆனால், இயேசு உயிர்த்தெழுந்த நிகழ்வும், யாக்கோபுக்கு விசேஷமாகத் தரிசனமான நிகழ்வும் இதையெல்லாம் மாற்றியிருக்கவேண்டும். 1கொரி 15:7. பின்னாட்களில் கிறிஸ்தவச் சபையின் தலைவராக பேதுருவை நியமிக்காமல், யாக்கோபை நியமிக்கிறார்கள். அப் 12:17; 15:13; 21:18; கலா 2:9,12.

அவர்கள் ஜெபத்தில் தரித்திருந்தார்கள். அப் 1:14. தேவாலயத்திலே நாள்தோறும் தேவனைப் புகழ்ந்துகொண்டிருந்தார்கள். லூக்கா 24:53. பாவங்களை அறிக்கையிட்டார்கள்; மனந்திரும்பினார்கள்; பாவங்களைவிட்டொழித்தார்கள். ஆவியானவர் வந்ததும் இயேசுவின் வருகை இருக்கும் என்றே அப்போது நம்பிக்கொண்டிருந்தார்கள். ஆனாலும், ஆவியானவரைப் பெற்றுக்கொள்வதில் அவர்கள் ஒருமித்த கருத்தோடு இருந்தார்கள். அவர்கள் ஜெபித்துக்கொண்டிருந்த போதுதானே, பரிசுத்த ஆவியானவர் அருளப்படுகிறார்.

பரிசுத்த ஆவியானவர் நம்முடைய வாழ்க்கையில் கிரியைசெய்யும்படியான சூழ்நிலையை உருவாக்குவதற்கு, ஒவ்வொரு நாளும் நாம் எப்படிப்பட்ட தீர்மானங்களைச் செய்யலாம்?

**வியாழன், ஜூலை 5**

## பன்னிரெண்டாவது அப்போஸ்தலன்

முதன்முதலாக உருவான கிறிஸ்தவ சபையில் சுமார் 120 விசுவாசிகள் இருந்தார்கள். அப் 1:15. யூதாஸுக் குப்பதிலாக ஒருவரைத் தேர்ந்தெடுத்ததுதான் நிர்வாக ரீதியாக அவர்கள் கூடி எடுத்த முதல் முடிவு.

**யூதாஸுக்குப்பதிலாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறவனுக்கு என்ன தகுதி இருக்க வேண்டுமென்று சொன்னார்கள்? அப் 1:21,22. இதன் முக்கியத்துவம் என்ன?**

இயேசுவின் உயிர்த்தெழுதல் குறித்துச் சாட்சிகொடுப்பவராக இருக்க வேண்டும். ஒப்பிடவும்: அப் 4:33. இயேசுதான் மேசியா என்பதற்கும், ஒட்டு மொத்த கிறிஸ்தவ விசுவாசத்தின் சத்தியத்திற்கும் ஒரு வலுவான ஆதாரமாக உயிர்த்தெழுதல் கருதப்பட்டதுதான் இதற்கு முக்கிய காரணமாகும்.

இயேசுவின் ஊழியங்களில் அப்போஸ்தலர்களோடு இருந்தவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பவுலும் ஒன்றை வலியுறுத்துகிறார். அதாவது, பூமியில் இயேசு இருந்தபோது அவரோடு தான் இல்லாவிட்டாலும், தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் இயேசுவைச் சந்தித்தது, அவருடைய உயிர்த்தெழுதல் குறித்து சாட்சிபகரவும், அப்போஸ்தல ஊழியம் செய்யவும் தன்னைத் தகுதியாக்கினதென்று கூறுகிறார். 1கொரி 9:1. ‘காலம் தப்பிப் பிறந்த ஒருவனைப் போல’ தான் இருந்தாலும், மற்ற அப்போஸ்தலர்களைவிட தான் தகுதி குறைந்தவனல்ல என்று பவுல் சொல்கிறார். 1கொரி 15:8, பொது மொழிபெயர்ப்பு; 1கொரி 9:2; கலா 2:6-9. அதிகாரப்பூர்வமாகப் பார்த்தால், பன்னிரு சீடர்களும், பவுலும் தான் ‘அப்போஸ்தலர்களாக’ இருந்தார்கள், அப் 1:25,26; ஆனால் தேவனுடைய தூதுவர்கள் என்கிற அடிப்படையில் பார்த்தால், சுவிசேஷப் பணியாளர்கள் எல்லோருமே அப்போஸ்தலர்கள்தாம். அப் 14:4,14; கலா 1:19.

**மத்தியா எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டார்? அப் 1:23–26.**

---

மத்தியா தேர்வுசெய்யப்பட்டவிதம் புதுமையாகத் தெரியலாம்; ஆனால் முடிவு எடுப்பதற்கு சீட்டுப்போட்டும் முறை ஆரம்பம்முதலே காணப்பட்ட ஒன்றாகும். லேவி 16:5-10; எண் 26:55. மேலும் அந்த இருவருமே எல்லாருக்கும் பரிச்சயமானவர்கள்; முன்பின் தெரியாதவர்கள் அல்ல; சம அளவில் தகுதி படைத்தவர்கள். தேவன் தம் சித்தத்தைத் தெரியப்படுத்த வேண்டுமென விசுவாசிகள் ஜெபித்தார்கள். ஒப்பிடவும்: நீதி 16:33. சீட்டு யார் பேரில் விழுந்ததோ அதற்கு யாருமே மறுப்பு சொல்லவில்லை. பெந்தெகொஸ்தே அனுபவத்திற்கு பிறகு, சீட்டுப்போடுதல் அவசியமாக இருக்கவில்லை; பரிசுத்த ஆவியானவரே அவர்களை நேரடியாக வழிநடத்தினார். அப் 5:3; 11:15-18; 13:2; 16:6-9.

‘என்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய சித்தத்தை நான் எவ்வாறு அறிந்துகொள்வது’ என்று யாராவது உங்களிடம் கேட்டால் அவருக்கு என்ன பதில் சொல்வீர்கள்? உங்கள் பதிலுக்கான காரணத்தைக் கூறுங்கள்.

## மேலும் படிக்க:

'பெந்தெகொஸ்தேக்கும் இரண்டாம் வருகைக்கும் இடைபட்ட காலக்கட்டத்தில் ஆவியானவரின் வல்லமையால் உலகம் முழுவதிற்கும் நற்செய்தியை சபை அறிவிக்கவேண்டும். அக்காலம் அதிகமோ குறைவோ அது பிரச்சனை இல்லை. இயேசு தம் முதலாம் வருகையில் சாதித்ததை அறிவிக்கவேண்டும்; மக்கள் மனந்திரும்பி, அவருடைய வருகைக்கு ஆயத்தமாகிற சிந்தையை வளர்க்க, அவர்களை கிறிஸ்துவின் சீடர்கள் பழக்கவேண்டும். 'பூமியின் கடைசி பரியந்தமும்' 'உலகத்தின் முடிவு பரியந்தமும்' அவருடைய சாட்சிகளாகப் பணிசெய்யவேண்டும். அப் 1:18. இதைச் செய்து முடிக்கும்வரை நாம் அயரக்கூடாது.'- *John R. Stott, p 44.*

'சீடர்களுக்கு இரட்சகர் கொடுத்த ஊழியக்கட்டளை எல்லா விசுவாசிகளுக்கும் பொருந்தும். உலகத்தின் முடிவுமட்டும் உள்ள கிறிஸ்துவின் பிள்ளைகளுக்கும் பொருந்தும். ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவது போதக அபிஷேகம் பெற்றவர்களின் கடமை என்று நினைப்பது மிகப்பெரிய தவறு. தேவன் யார் மனதிலெல்லாம் ஏவுகிறாரோ, அவர்களிடம் இந்த மகத்தான பணி ஒப்படைக்கப்படுகிறது. கிறிஸ்துவின் ஜீவனைப் பெறுகிற யாவரும் சகமனிதர்களின் இரட்சிப்புக்காக ஊழியம்செய்ய அபிஷேகிக்கப்படுகிறார்கள். இந்த ஊழியத்திற்காகவே சபை ஸ்தாபிக்கப்பட்டது; அதன் பரிசுத்த கட்டளைகளை சிரமேற்று செயல்படுகிற அனைவருமே கிறிஸ்துவோடு சேர்ந்து பாடுபடக் கடமைப்பட்டவர்கள்.' - *EGW, DA, p 822.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *மாற்கு 13:32ஐ அப் 1:7 நினைவுபடுத்துகிறது: 'அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார்.' "இன்ன நாளில் வருவார் என்று தேவ பிள்ளைகளுக்கு இனி எந்தச் செய்தியும் கொடுக்கப்படாது. பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுதலும் கிறிஸ்துவின் வருகையும் சரியாக எப்போது நிகழும் என்பதை நாம் அறிந்துகொள்ள முடியாது" என்று எலன் ஒய்ட் சொல்கிறார். 1SM, p 188. மேலும் அவர், "அந்த நாள், நாழிகை அல்லது வருடத்தைக் கணித்து பிரசங்கிக்க துவங்குகிறவர்கள் எல்லாரும் தங்கள்மேலேயே பாரத்தைச் சுமத்திக்கொள்கிறார்கள்; தேவன் தங்களுக்குக் கொடுக்காத ஒரு செய்தியை அறிவிக்கிறார்கள்." - ARSH, Sep 12, 1893. இந்த வார்த்தைகள் எவ்வாறு இன்று நமக்குப் பொருந்தும்?*

2. *"வழக்கறிஞர்களைவிட சாட்சிகள்தாம் தேவனுக்கு அதிகம் தேவைப்படுகிறார்கள்" என்று ஒருமுறை ஒருவர் சொன்னார். இதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

3. *ஆதிகாலச் சபையில் ஜெபம் எவ்வளவு முக்கியப் பங்காற்றியது? முக்கியமான தருணங்களில் எல்லாம் அவர்கள் ஜெபித்தார்கள் என்பது எதேச்சையாக நடந்த ஒன்றா? அப் 1:25; 8:14-17; 9:11,12; 10:4,9,30; 13:2,3. நம்முடைய வாழ்க்கையில் ஜெபத்தின் பங்கு என்ன?*